முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

<u>அசல் வழக்கு எண். 1/2018</u>

<u>பிடபிள்யு - 1. ரங்கசாமி</u>

<u>28.11.2018</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

எனது தந்தைக்கு என்னையும் சேர்த்து 4 பிள்ளைகள். எனக்கு பட்டா இடம் 3 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. எனது பட்டா இடம் தாவா சொத்திற்கு 750 அடி தள்ளி இருக்கும் 3 போஸ்ட் இடைவெளி. எனது பட்டா இடம் ஊரில் நத்தத்தில் இருந்து வடக்கு திசையில் உள்ளது. நாங்கள் சகோதரர்கள் நால்வரும் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் இல்லை. தோட்டத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. எனது தந்தை தற்போது உயிரோடு இல்லை. எனக்கு வாக்காளர் அடையாள அட்டை உள்ளது. எனது வாக்காளர் அடையாள அட்டையில் கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது ஆதார் அட்டை முகவரியிலும் கதவு எண் குறிப்பிடபடவில்லை. எனது குடும்ப அட்டையில் கதவு எண் குறிப்பிடபட்டுள்ளது. மேற்சொன்ன அடையாள அடடைகள் மற்றும் குடும்ப அட்டையை என்னால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எனது குடும்ப அட்டையில் உள்ள வீட்டின் கதவு எண்ணும் வாய்தா ரசீதுகளில் குறிபிபட்டுள்ள கதவு எண்ணும் ஒன்றாக இருக்குமா என்றால் இருக்கும். எனது பட்டா இடத்தில் 4 வீடுகள் உள்ளதா என்றால் இல்லை 2 வீடுகள் உள்ளது. எனது பட்டா இடததில் உள்ள வீடுகளின கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது பட்டா இடத்தில் உள்ள வீடுகளுக்கும் வீட்டு வரி ரசீதுகள் கொடுக்கபடுகிறதா என்றால் கொடுக்கப்படுகிறது. அந்த வீட்டு வரி ரசீதுகளில் உள்ள முகவரி தொப்பம்பட்டி கிராமம் தாசரிநாயக்கனூர் என்ற முகவரி குறிப்பிடபட்டு வழங்கப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதிக்கு வீடு உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு பட்டா இடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தின் ரோட்டிற்கு வடக்கில் பொன்னுத்தாயின் வீடு உள்ளது என்றால் சரிதான். மூக்காயி இடத்திற்கு மேற்கு காலியிடமாக உள்ளது என்றால் சரிதான்.

தாவா இடத்திற்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எனது தந்தை பெயரிலோ பாட்டனார் பெயரிலோ பட்டா இருந்ததா என்ற்றால் இல்லை வரி ரசீது தான் கட்டி வந்தார்கள். வா.சா.ஆ 1, 2 ஆவணங்கள் தவிர தாவா சொத்தை பொறுத்து எங்கள் பெயரில் வேறு எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்ற்ல இல்லை. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் காலி நத்தமாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். நான் 30 ஆண்டுகளாக எனது தாத்தா காலத்தில் இருந்து தாவா சொத்தை அனுபவித்து வருவதாக சொல்வதை காட்டுவதற்கு எதாவது வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் வீட்டு வரி ரசீதை தவிர வேறு எதுவும் கிடையாது. வா.சா.ஆ 1 , 2 ஆவணங்களில் பட்டா எண்ணோ சா்வே எண்ணோ குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பட்டா எண்ணோ சா்வே எண்ணோ வா.சா.ஆ 1, 2 ஆவணங்களில் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1, 2 ஆவணங்களில் பணம் செலுத்தும் என்ற இடத்தில் எவ்வித கையொபபமும் இல்லாததால் அது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1, 2 ஆவணங்கள் எனது பட்டா இடத்தில் உள்ள வீட்டிற்கு கொடுக்கபட்டவை என்றால் சரியல்ல. எனது பட்டா இடத்திற்குரிய ரசீதுகளை தாக்கல் செய்து தாவா சொத்தில் பொய்யாக உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 யை வருவாய் அதிகாரிகள் பெற்றுக்கொண்டதை காட்டுவதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 4 மனுவை அனுப்பி பின் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான். நான் இவ்வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ 3, 4 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக நத்தத்தில் இரண்டரை சென்டிற்கு மேல் கொடுக்கமாட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை பிரதிவாதி தான் பயன்படுத்தி வருகிறாா் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு முன்பு பிரதிவாதியின் அனுபவித்தில் இருந்த இடத்தில் உள்ள வைக்கோல் போரை எரித்தது தொடா்பாக பிரதிவாதி புகாா் கொடுத்திருந்தாரா என்றால் கொடுத்திருந்தா்ா. புகாா் கொடுத்தது தொடா்பாக பிரதிவாதியை நான் அடித்ததால் மீண்டும் ஒரு புகாா் கொடுக்கபட்டது என்றால்

கொடுத்தார் நாங்களும் அவர் மீது புகார் கொடுத்தோம். தாவா இடத்தை பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும் அவரை தொல்லை செய்யும் நோக்கத்துடன் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் அரசாங்கத்தை தரப்பினாரா சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.